செ.வெ.எண்.204 நாள்.29.04.2019.

# திருநெல்வேலி மாவட்டம், மாங்குடி மருதனார் நினைவு தூணிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.04.2019) மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மாங்குடி கிராமத்தில் அமைந்துள்ள சங்கப்புலவர் மாங்குடி மருதனார் நினைவுத் தூணிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.04.2019) மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் 128வது பிறந்த நாள் உலகக் கவிஞர்தினமாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களில் மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கப்புலவர்களில் தனிச் சிறப்போடு விளங்கியவர் திருநெல்வேலி மாவட்டம், மாங்குடி கிராமத்தில் பிறந்த மாங்குடி மருதனார். இவர் இயற்றிய 13 பாடல்கள் சங்க இலக்கியத் தொகுப்பில் உள்ளது. அகநானூறு, புறநானூறு நற்றினை மதுரைக்காஞ்சி ஆகிய சங்க இலக்கியங்களில் இவரது பாடல்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இத்தகைய சிறப்புகளை உடைய மாங்குடி மருதனாருக்கு 1992ம் ஆண்டு தமிழக அரசால் நினைவுத் தூண் அமைக்கப்பட்டது.

தமிழ் கவிஞர்கள் தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி, சிவகங்கை, காஞ்சிபுரம், கரூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு தமிழக அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படுகிறது. தமிழின் தொன்மை பண்பாட்டு அடையாளங்களை நாம் தெரிந்து கொள்வதற்கும், எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் சங்கப்1 புலவர்கள் இயற்றியுள்ள பல பாடல்கள் உதவியாக உள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த மாங்குடி மருதனாருக்கு இன்று மலர்தூரி மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. எதிர்கால மாணவ சமுதாயத்தினர் இவரது சிறப்புகளை அறிந்து, ஆராய்ச்சி படிப்புகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை மண்டல துணை இயக்குநர் திரு.கா.பொ.இராசேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சுப்பிரமணியன், திரு.பாலசுப்பிரமணியன், வட்டாட்சியர், தமிழக அரசின் தமிழ்ச் ச8ம்மல் விருதாளர் கவிஞர் பேரா.மாங்குடி மருதனார் மன்ற நிர்வாகிகள் ஊர்ப் பொதுமக்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.